**கைலாஷ் மானசரோவார் யாத்திரை 2013 தொகுப்பு 2முதல் 10வரை அரசு ரத்து செய்துள்ளது**

2013 ஜூன் 19

உத்தராகண்டில் பெய்து வரும் அடை மழை மற்றும் வெள்ளம் காரணமாக, வெளியுறவுத்துறை அமைச்சகம் கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்கு பயன்படுத்தும் பாதையில் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அல்மோரா மற்றும் தவாகாட் இடையேயான சாலையில் பல இடங்களில் சாலை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளது, பெரிய பாலங்கள் சில சேதம் அடைந்துள்ளன. நிலச்சரிவு காரணமாக பக்தர்கள் நடந்து செல்ல வேண்டிய இடங்களும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. மாநில மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தினர். இந்த பாதைகள் சீரமைக்க ஒரு மாதத்திற்கு மேல் ஆகும் என்று மதிப்பிட்டுள்ளனர். யாத்திரிகர்களின் பாதுகாப்பும் பத்திரமும் மிகவும் முக்கியம் என்பதால், கைலாஷ் மானசரோவர் யாத்திரையின் இந்த ஆண்டின் யாத்திரையின் தொகுப்பு எண்கள் 2-10 வரை ரத்து செய்ய அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தகவல் பெற விரும்பும் யாத்திரிகர்கள் அமைச்சகத்துடன் sochina@mea.gov.in என்ற இமெயில் முகவரி அல்லது 011-23014900 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**புது தில்லி**
**2013, ஜூன் 19**